புதிய அவையம்

**PUTHIYA AVAIYAM**
(PEER – REVIEWED JOURNAL)
**ISSN :2456-821X**
**Vol. 08, Issue 02, January 2025**

# மனோன்மணீயத்தில் மெய்யியல்

**முனைவர் ஆ. மரிய தனபால்**
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 02.

**ஆய்வுச்சுருக்கம்**

தத்துவவியல் நோக்கில் எழுதப்பெற்ற அனைத்தும், எல்லா காலங்களிலும் ஏற்கப்படக்கூடிய நிலையில் உள்ளனவா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஏனென்றால் அறிவியலை முன்னிறுத்தாமல் அனுபவ நோக்கில் எழுந்தவையே தத்துவங்கள் என்பதால் இக்கேள்வி எழுகிறது. எனினும், அறிவியல் வளர்ச்சிப்பெறுவதற்கு முன்பே தத்துவங்களை உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. அனுபவ அறிவோடு எடுத்துரைக்கப்பட்டக் கருத்துக்களை உள்ளுணர்வோடு சிந்தித்துப் பார்த்தால் உண்மைக்கு நெருக்கமானதாகவே இருக்கும். இந்த அடிப்படையில் மனோன்மணீய நாடக நூலை அணுகும் போது, தத்துவவியல் கோணம் உண்மையை நெருங்கியுள்ளதை அறிய முடிகிறது. அப்படி உண்மைக்கு நெருக்கமானவற்றை இக்கட்டுரையில் எடுத்து இயம்புவது நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**

மெய்யியல், பிறப்பு, இறப்பு, விதி, இல்லறம், துறவறம், தழுவல், ஒருங்கு, களவு, காதல், பெண் உள்ளம், உழைப்பு, நோக்கம், ஞானி, துறவி, திருமணம், உணர்வு, மெய், கற்றல், அனுபவம், வாழ்வியல், சிந்தனையாளர், சட்டம்.

**முன்னுரை**

கி.பி. 1891 ஆம் ஆண்டு பேராசிரியர் பெ. சுந்தரனார் அவர்களால் எழுதப்பெற்ற மனோன்மணீயம் என்னும் செய்யுள் நாடகம் வெளிவந்தது. தமிழிலக்கிய உலகில் இந்நூலுக்கு ஒரு தனித்த இடம் உண்டு. 1970 ஆம் ஆண்டு முதல் இந்நூலினுள் இடம்பெற்ற தமிழ்த் தெய்வ வணக்கப் பாடலைத் தமிழகத்தில் அரசுப்பாடலாக அறிவிக்கப்பட்டு இன்றுவரை அம்மரபு பின்பற்றப்பட்டு வருகிறது. லிட்டன் பிரபு என்னும் ஆங்கிலேயர் எழுதிய இரகசிய வழி (The Secret Way) என்ற நூலைத் தழுவி பன்னிரண்டு ஆண்டுகள் உழைப்பிற்குப் பிறகு வெளிவந்த ஒரு தழுவல் இன்பியல் நாடகம் என்ற வடிவில் கிடைத்த ஓர் அரிய பெட்டகம் என்று இந்நூலைக் குறிப்பிடலாம்.

இந்நூல் வெளிவந்த ஆண்டில்தான் பாரதிதாசன் பிறந்தார். பல நூல்களை இவர் எழுதி இருப்பினும் புரட்சிக்கவி என்பது இவர் பெயருக்கு முன்னொட்டாக அமைந்தது போல், மனோன்மணீயம் என்று முன்னொட்டு சுந்தரனாருக்கும் அமைந்தது. பன்மொழி புலமையும் பல்துறை அறிவும் ஒருசேர பெற்ற இவர், திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் தத்துவவியல் அல்லது மெய்யியல் துறைப்பேராசிரியராகப் பணியாற்றியவர். தன்னுடைய 42 ஆவது வயதில் உயிர் நீத்தார். இப்படிப்பட்ட சிறப்புகளைப் பெற்றவரான சுந்தரனார் தம்முடைய மனோன்மணீய நூலில் எடுத்தாளப்பெற்ற இந்திய அறிவு ஒருங்கில் தத்துவவியல் கருத்துக்களை எடுத்துரைத்து, அதன்வழி வாழ்வியலில் மனிதகுலம் அன்றாடம் சந்திக்கும் கூறுகளான பிறப்பு, இறப்பு, விதி, பெண்ணியம், காதல், திருமணம், இல்லறம், துறவறம் போன்றனவற்றைத் தத்துவநோக்கில் இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

**மெய்யியல் விளக்கம்**

மெய்யியல் தற்காலத்தில் அறிவியல் என்று அறியப்படும் துறை சிறப்புற்று வளரும் முன்னர் மெய்யியல் துறைதான் முன்னணியில் இருந்த அறிவுத்துறை ஆகும். மெய் என்ற உடலில் உணர்வு என்ற உண்மையைப் புத்தியில் தேட அறிவு என்ற ஆற்றல் வெளிப்படும்பொழுது தத்துவம் என்ற உண்மை உணர்வை அனைவராலும் ஏற்றுக்கொள்ளபடும். கருத்துக்களின் விளக்கத்தை உணர்வுபூர்வமாக அறிய வைப்பது மெய்யறிவு எனப்படும். 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இந்தியர்களும், சீனர்களும்

பிற உலக மாந்த இனங்களும் பலவாறாக அடிப்படையாகச் சிந்தித்து தொகுத்து வைத்த கருத்துக்கள்தாம் மெய்யியலின் தொடக்கம் எனலாம். Pilo-sophia என்ற கிரேக்கச்சொல்லிருந்து ஆங்கிலத்திற்கு Philosopy என்று உருவானது. இச்சொல்லிற்குப் பொருள் அறிவின் பால் காதல் என்பதாகும்.

**விதி**

விதி என்பது நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளை நிர்ணயிக்கும் சக்தி ஆகும். இது முன்னரே தீர்மானிக்கும் நியதி என்று பொருள்படும். அதற்கு வாய்ப்பு, சூழ்நிலை, அதிர்ஷடம் என்றெல்லாம் வேறுபெயர்கள் உண்டு.

**" தலைவிதி தடுக்கற் பாற்றோ? தொலைய**
**அனுபவித் தன்றோ அகலும்"**[1] (மனோன், மு.அ, இ.க, பா.வ 32-33)

என்று குறிப்பிடுவதிலிருந்து, ஒருவனுக்கு ஏற்படக்கூடிய நல்லது கெட்டது அனைத்தையும் சூழ்நிலையானது நிர்ணயம் செய்யும். அந்நிலைக்காக காலத்தையும் நேரத்தையும் எண்ணி கலங்கிக் கொண்டிருக்கக்கூடாது. விதியை மதியால் வெல்லலாம் என்ற பேச்சு வழக்கை மறுபரிசீலனை செய்வதற்கு மேற்கூறிய அடிகள் இடமளிக்கின்றன. நடப்பது நடந்தே தீரும். வெந்ததை தின்றுவிட்டு விதி வந்தால் சாவோம் என்று நாட்டுப்புறச் சொல்வழக்கு உண்டு. அச்சொல்வழக்கிற்கு வலுசேர்க்கும் விதமாகதான் மேற்கூறப்பட்ட கருத்துக்கள் அமைந்துள்ளன. எனவே, சோதிடம், இராகுகாலம், நாள், நட்சத்திரத்தைக் காட்டி அதன் மேல் பழிபோடுவது கூடாது.

**காதல்**

காதல் என்பது உயிரினங்களுக்கிடையே ஏற்படும் பாலியல் ஈர்ப்பு, அன்பு, அக்கறை சேர்ந்து வாழவேண்டும் என்ற ஆசை ஆகியவற்றைக் குறிக்கும்.

**"காதலென் பதுவென்? பூதமோ? பேயோ?**
**வெருட்டினால் நாய்போ லோடிடும் தெருவில்**
**துரத்தும் குரைக்கும் தொடரும் வெகுதொலை"**[2]

(மனோன், மு.அ, இ.க, பா.வ. 102-104)

என்ற செய்யுள் அடிகளிலிருந்து, காதல் என்பது பூதம், பேய் அல்ல. ஆனால், அக்காதலானது உயிரினங்களை விட்டுவைப்பதில்லை. இதிலிருந்து விடுபடவேண்டுமெனில் மனக்கட்டுப்பாடு தேவை. நாயை விரட்டுவதுபோல விரட்டிவிடலாம் என்பது மேற்கண்ட செய்யுளின் பொருளாகும். இக்காதலை

உணரமுடியுமோ தவிர படித்து அறிந்து கொள்வதென்பது அரிது என்பதை, நூறாக் கேட்கினும் நூலறி வென்செயும் என்றும், காற்றும் பெட்பும் ஒரு காரணமுமில்லாம் இயங்கும் என்றும் மனோன்மணீய நூலாசிரியர் இயம்புகிறார்.

**இல்லறம்**

சமுதாயத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் பிணைப்பே இல்லறம் ஆகும். இல்லறம் என்பது கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகும். ஒழுக்க நெறிகளின் தொகுப்போடு இல்லறத்தார் வாழ்வது வாழ்வியல் கடனாகும்.

**“இல்லற மென்பதன் நல்லுயி ரேயாய்**
**நின்ற காதலின் நிலைமை, நினையில்**
**இரும்பும் காந்தமும் பொருந்துந் தன்மை போல**
**இருவர் சிந்தையும் இயல்பா யுருகி**
**ஒன்றாந் தன்மை யன்றி, ஒருவரால்**
**ஆக்கப் படும் பொரு யாமோ?“**[3] (மனோன், மு.அ, நா.க, பா.வ. 99-104)

என்ற அடிகளில், ஆணும் பெண்ணும் இருவருடைய மனங்களும் இயல்பாய் உருகி, இரும்பும் காந்தமும் ஈர்க்கும் தன்மை போல் ஒன்றிணைய வேண்டும். இரும்பும் காந்தமும் எதிரெதிர் பக்கங்கள் ஈர்க்காது எதிர்க்கும் என்ற அறிவியல் உண்மையை உணர்வால் அறிவதே இல்லறம் என்னும் நல்லறமாகும். இல்லறம் என்பது பயிற்றுவிக்க முடியாது. தாமே முயன்று கற்றுக்கொள்ள வேண்டிய சுயக்கற்றலாகும்.

**துறவறம்**

இல்லறம், துறவறம் என்று வாழ்வியலில் அறங்களை இரண்டாக வகைப்படுத்துவர். எனினும், இவ்விரண்டினுள் இல்லறமே சிறந்தது என்பர். இரண்டு அறங்களுக்கும் தனிச்சிறப்பு உண்டு. இதற்குக் கடமையும் கட்டுப்பாடு விதைந்தோதப்படுவதும் இன்றியமையாததாகும்.

**“துறந்தார் முற்றுந் துறந்தவரல்லர்**
**மறந்தார் சிற்சில“[4]** (மனோன், இ.அ, மு.க, பா.வ. 202-203)

என்ற இவ்அடிகள் மிகவும் கூர்மையுடன் உற்று நோக்குவதற்குரியனவாகும். துறவறத்தாருக்கும் பெண்ணாசை மண்ணாசை பொருளாசை என்கிற இம்மூன்றும் அவ்வப்போது வந்துபோகும் எனக் குறிப்பிடப்படுகின்றன. இருப்பினும் கட்டுப்பாடு என்கிற நிலையில் அதையெல்லாம் மறப்பதற்கு முற்படுவர்.

மேலும், இகழ்ச்சியும் புகழ்ச்சியும் மின்பந் துன்பமும் எல்லாமில்லை என்று நூலாசிரியர் குறிப்பிடுவர். இல்லறத்தான் தவறு செய்தால் அவன் சந்ததியினரைத் தாக்கும். துறவறத்தான் தவறு செய்தால் அவனையே தாக்கும் என்ற அச்ச உணர்வுடன் கட்டுப்பாடுகளுடன் வாழ்வதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை மேற்கொள்ளக் கூடியவர்களாகத் தான் உலகம் அவர்களைப் பார்க்கிறது. உயர்வு, தாழ்வு, இகழ்ச்சி, புகழ்ச்சி, இன்பம், துன்பம் இவைகள் எதைப்பற்றியும் கவலைக்கொள்ளாமல் பற்றற்ற நிலையில் வாழும் வாழ்க்கையைத் துறவறம் மேற்கொள்ளுவரால் விரும்பப்படுகின்றன.

**பெண்**

பெண் என்பவள் அன்பில் சிறந்தவள், கருணையின் வடிவமானவள் என்றெல்லாம் போற்றப்படுவதற்குரியவள். அன்பிற்கு ஏங்கும் எளிய உள்ளமும், வலிமைகுன்றிய மெல்லிய உடலும் ஒன்றாய் கொண்ட அற்புதத்தின் தேசம் போல் விளங்கக்கூடியவள் ஆவாள்.

**“பெண்களின் பேதமை யென்னே தங்களைப்**
**பெற்றா ருற்றார் களுக்குத் தமக்கும்**
**விழுமம் விளைத்துத் தாமே யழுவர்**
**என்னே யவர்தம் ஏழைமை**“[5] (மனோன், மு.அ, மூ.க, பா.வ. 60-64)

என்ற அடிகளில் பெண்களின் இயல்பை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. பேதை என்பதற்கு ஒன்றும் அறியாத நிலையாகும். அன்பென்ற ஒற்றைக் காரணத்திற்கு தன் இயல்பை இழக்கக்கூடிய நிலைக்கு தள்ளப்படுகிறாள். அவளுடைய இந்நிலையானது பெற்றவருக்கும் உடன்பிறந்தவர்களுக்கும் துன்பம் விளைவிப்பவளாகப் பார்க்கப்படுகிறாள்.

**“அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப“**[6] (தொல், களவு, நூ.1045)

என்று தொல்காப்பியர் குறிப்பிடும் நூற்பாவிலிருந்து, அச்சம், நாணம்,மடன் என்று முப்பண்புகளும் தலைதூக்கி நிற்பவையாகும். எக்காலத்திலும் பெண்டிருக்குரியவை என்று கூறுகிறார். மேலும், “ஆண்களால் உருவாக்கப்பட்ட மதங்களும், சாத்திரங்களும், சட்டங்களும், இலக்கியங்களும் பெண்களுக்கு அடிமை விலங்கு பூட்டியே அழகு பார்த்தன. சிந்தனையாளர்களும் தத்துவஞானிகளும் கூட, பெண்ணின் உடம்பையே பார்த்தனர் என்பது ஒரு கசப்பான உண்மை. போகத்துக்காகவே படைக்கப்பட்ட பொதுவுடைமைப் பொருள் பெண் என்பதுதான் சாக்ரடீசின் சிந்தனை. ஒன்று ஆள்வதும், மற்றொன்று

ஆளப்படுவதும் இயற்கையின் விதி. எனவேதான், ஆண் ஆள்கிறான். பெண் ஆளப்படுகிறாள் என்று விளக்கம் தந்து ஆணாதிக்கத்துக்கு ஆராதனை செய்தவர் அரிஸ்டாட்டில்"[7] என்று தமிழருவி மணியன் குறிப்பிடுகிறார்.

**திருமணம்**

திருமணம் என்ற ஒன்று மனிதனை முழுமையாக்கும். சமுதாயத்தில் ஒரு வரையறைக்கு உட்பட்டு வாழவேண்டிய கட்டமைப்பை அது ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக பெண்களுக்குப் பாதுகாப்பை அமைத்துத்தரும் ஒன்றாக தாய் தந்தையர்களால் திருமண நிகழ்வு எதிர்நோக்கப்படுகிறது. இன்றைய நிலையில் பெண்ணைப் பெற்றவர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு வாழவேண்டிய நிலை உள்ளது. தொழில்நுட்பம், நாகரிக வளர்ச்சியால் எளிதில் பெண் பிறழக்கூடியவளாக மாறுகிறாள்.

**"வதுவை மங்கையர்க்குப்**
**பெற்றா ராற்றுவர். ஆற்றிய வழியே**
**தையலர் மையலாய் நேயம் பூண்டு**
**வாழ்வது கடமை"[8]** (மனோன், மு.அ, நா.க, பா.வ.76-78)

என்கிறது மனோன்மணீயம். பெற்றோர்கள்தான் பிள்ளைக்குத் திருமணம் செய்து வைப்பார்கள். யாருக்குத் திருமணம் செய்து வைக்கிறார்களோ அவருடன் நேசமுடன் வாழ்வது கடமை என்கிறது. நேசமில் வதுவை நாசகாரணமே என்று என்று எதிர்வாதம் பெண்கள் பேசினாலும், பெண்ணாகப் பிறந்துவிட்டால் சுதந்திரம் ஆணைவிடக் குறைவுதான் என்பது கசப்பான உண்மையாகும்.

**"குழவிப் பருவம் நழுவுங் காலை**
**களிமிகு கன்னிய ருளமும் வாக்கும்**
**புளியம் பழமுந் தோடும் போலாம்"** [9] (மனோன், மு.அ, மூ.க, பா.வ.166-168)

என்ற அடிகளில், காதல் என்கிற ஒன்றில் குழந்தைத்தனம் மாறும்போது ஒட்டியும் ஒட்டாமலும் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசக்கூடிய நிலையில் பெருவாரியான பெண்கள் இன்றைய காலகட்டத்தில் உள்ளனர்.

**"காமக் கனிச்சி உடைக்கும் நிறைஎன்னும்**
**நாணுத்தாள் வீழ்த்த கதவு"**[10] (குறள்.01)

என்று நிறையழிதல் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர், நாணம் என்னும் தாழ்பாளால் மூடப்பட்ட நிறை என்னும் கதவினைக் காமம் என்னும் குந்தாலி பிறந்து விடும் என்கிறார்.

**முடிவுரை**

மனோன்மணீயம் செய்யுள் நாடகம் என்ற வடிவில் அமைந்த இலக்கியம். இதில் கற்பனை வளம் மிகுந்த கதையம்சம் கொண்ட ஒரு புனைவாகும். எனினும், இதனுள் அன்றாட மனித வாழ்வில் நடைபெறும் இயல்புகளைத் தத்துவநோக்கில் எடுத்துரைக்கப்பெற்றுள்ளன. மெய்யியல் அல்லது தத்துவவியல் என்பது உண்மையை உள்ளதை உள்ளவாறே அறிவதைப் பற்றிய கொள்கை இயல் என்று பொருளாகும். இதனடிப்படையில் குடும்பம், திருமணம், இல்லறம், துறவறம், விதி இன்னபிற கருத்துக்களை அறிவியலைக் கடந்து உணர்வுநிலையில் சொல்லப்பட்டன அனைத்தும் அனைவராலும் எக்காலத்திலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைகிறது. இதுவே இந்த மெய்யியலின் மேன்மை என்று அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. துரை தண்டபாணி (உரை.), மனோன்மணீயம், ப.32.
2. மேலது, ப.36.
3. மேலது, ப.64.
4. மேலது, ப.92.
5. மேலது, ப.47.
6. முனைவர் ச.வே. சுப்பிரமணியன் (உரை.), தொல்காப்பியம் தெளிவுரை, ப.404.
7. தமிழருவி மணியன், ஊருக்கு நல்லது சொல்வேன், ப.185.
8. துரை தண்டபாணி (உரை.), மனோன்மணீயம், ப.62.
9. மேலது, ப.68.
10. கருப்பூர் மு. அண்ணாமலை (உரை.), திருக்குறள் தெளிவுரை, ப.282.

**துணைநூல் பட்டியல்**

1. துரை தண்டபாணி (உரை.), மனோன்மணீயம், உமா பதிப்பகம், 1999.
2. முனைவர் ச.வே. சுப்பிரமணியன் (உரை.), தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், 2008.
3. கருப்பூர் மு. அண்ணாமலை (உரை.), திருக்குறள் தெளிவுரை, பிரியா நிலையம், 2000.
4. தமிழருவி மணியன், ஊருக்கு நல்லது சொல்வேன், விகடன் மீடியா சர்வீசஸ், 2010.